## என் எண்ணங்கள் யாவும்

என் எண்ணங்கள் யாவும்
உம்மிடமே என் தேவா, என் தேவா
என் செயல்கள் யாவும்
உமக்காகவே என் தேவா, என் தேவா
என் ஆவி ஆத்மா சரீரம் யாவும்
உமக்குரியதே தேவா
என் தேவா, என் தேவா, என் தேவா

தேவனே நீர் என் தேவன்
அதிகாலமே உம்மை தேடுகிறேன்
வறண்ட நிலத்தில் என் ஆத்துமா
உம்மேல் தாகமாய் இருக்கின்றது

என் உயிருள்ள நாள் எல்லாம் உம்மைத் துதித்து
உம் நாமத்தை சொல்லி கையெடுப்பேன்
என் உதடுகள் உம்மை போற்றிடுமே
உம் நாமத்தை என்றும் உயர்த்திடுமே

இராஜாமஞ்களில் உம்மை தியானிக்கிறேன்
உம் வல்லமை மகிமையை கண்டிடுவேன்
நீரே என் துணையாய் இருப்பதினால்
உம் செட்டையின் நிழலில் மகிழ்ந்திருப்பேன்